உ

சிவமயம்

முல்லைத்தீவு சார்ந்த

தனியூற்றில் விளங்கும்

# குமாரபுரக் குமரவேள் பதிகம்

ஆக்கியோன்

**அல்வாயூர் மு. செல்லையா ஆசிரியன்**

*ஸ்ரீ லங்கா வித்தியாசாலை, அல்வாய்.*

முதற் பதிப்பு 1955 வைகாசி

இரண்டாம்பதிப்பு 1957 மார்கழி

அரும்பத விளக்கம் 13-ம் பக்கம் பார்க்க.



# முன்னுரை

எமது ஈழவளநாட்டின் வடபாகத்தைத் தமிழ் மன்னர்கள் பன்னெடுங்காலம் ஆட்சிபுரிந்தனர். இன்று பெருங் காடாகக் காட்சியளிக்கும் வன்னிப் பகுதி, அக்காலத்திலே சிறந்த செந்நெற் கழனியாகவும், நாகரிகஞ் சிறந்த சைவத் தமிழ்மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பாகவும் திகழ்ந்தது.

அந்நாளிலே வன்னியர்கள் எனப்படும் சிற்றரசர்கள், யாழ்ப்பாண மன்னர்களுக்கும், ஒல்லாந்தருக்கும் அடங்காத சுதந்திர வீரர்களாய்ச் செங்கோலோச்சியபடியால் வன்னிப் பகுதிக்கு '**அடங்காப்பற்று**' எனவும் ஒரு பெயருண்டு. அப்போது பற்பல சைவாலயங்கள் இப்பகுதியில் அமைக்கப் பட்டன என்றும், அவற்றுட் பலவற்றைக் கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் இடித்து அழித்தனரென்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். **புதுவூர், குமாரபுரம், உருத்திரபுரம், வற்றப்பளை** முதலியன பழங்கோயில்களாகும். பல கோயில்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை,

முல்லைத்தீவுக்கு அண்மையிலே "தனியூற்று" என்றொரு கிராமமுண்டு. இங்கேவற்றாத நீரூற்றுக்கள் பல இன்றும் இருக்கின்றன. இதனல் '**தண்ணீரூற்று**' என்ற காரணப் பெயர் தனியூற்று என்று மருவி வழங்கப்படுகின்றது. **தனியூற்றின் ஒருபகுதிதான் குமாரபுரம்.** இந்த இடமும் இக்காலத்தில் '**தண்ணீர் முறிப்பு**' என அழைக்கபபட்டு வரும் இடமும் முன்பு 'பெரிய குருந்தனூர்க்குளம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனவென அனுமானிக்கப்படுகின்றது. நிற்க.

நாகதீபத்தைத் தரிசித்த புத்தபகவான் இப்பகுதியிலுள்ள 'தண்ணி முறிப்புக்கட்டு' வழியாகத் தென்னிலங்கை சென்றரென்றும் ஒரு வரலாறு பேசப்படுகின்றது. மேலும் இடிக்கப்பட்ட இக் குமாரபுரக் கோயிலிலுள்ள செங்கற்களிலே தெய்வ உருவங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. இவற்றல் இவ்வாலயம் 2500 ஆண்டுகட்கு முற்பட்ட பழமைவாய்ந்தது என்று கருதப்படுகின்றது.

இவ்வாலயம் இடிபட்டுச் சிதைந்தபடியால் இங்கிருந்து எடுக்கப்பட்ட திருவுருவம் யாழ்ப்பாணம் – பொலிகண்டிக் கந்தவன ஆலயத்திற் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின் அது சிறிது ஊனமடைந்தமையால் வடக்கே உள்வீதியில் வைக்கப்பட்டு "பழையவர்" என்ற பெயரோடு இன்றும் பூசிக்கப்பெறுகின்றது.

இத்தகைய பெருமைவாய்ந்த ஆலயத்தை 1904-ம் ஆண்டில் மாவிட்டபுரம் **பிரமஸ்ரீ குமாரசாமிக்குருக்கள்** அரசினரிடமிருந்து விலைக்கு வாங்கி மீட்டனர். இப்போது இது புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. இதன் கும்பாபிஷேக வைபவம் மன்மதஸு வைகாசிமீ உ௦-ந்வ (3-6-55) வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது. இக்குமாரபுரத்துக் குமரவேளமீது ஒரு பதிகம் பாடித்தரும்படி இப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியும், தாபி அமைத்துக் - கும்பாபிஷேகம் நடத்துவதற்குப் பொருளுதவி புரிந்தவரும், தமிழ்ப் பெருமகனுருமாகிய **ஸ்ரீமான். செ. சுந்தரலிங்கம் அவர்கள்** நான் கொழும்பிலே தங்கியபோது கேட்டார்கள். அப்போது இது யாக்கப்பெற்று அப்பெரியாரால் அச்சிட்டுக் கும்பாபிஷேக நாளில் வினியோகிக்கப்பட்டது. ஆயினும் அப்பதிப்பிலே சிலபாடல்கள் தவிர்க்கப்பட்டமையால் இப்பதிப்பு வெளியிடவேண்டுவதாயிற்று.

வன்னிப்பகுதி ஆலயங்கள் முன்னைப்பெருமை அடைவதற்கு இவ்வாலய அதிபதியாகிய **பிரமஸ்ரீ கு. பரமசாமிக் குருக்கள்** அவர்களது இடையறாத ஊக்கமும் தொண்டும் சிறந்த முன்மாதிரியாக இருக்குமென்று நம்புகின்றேன்.

அன்புடன் அணிந்துரையுதவிய பண்டிதர் அவர்களுக்கு
ஆழ்ந்த நன்றியுடையேன்.

**அல்வாயூர்,**
11. 12 - 57.

இங்ஙனம்
**மு. செல்லையா.**

# அணிந்துரை

*யாழ்ப்பாணம் - பலாலி: ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர்*

**திருவாளர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்கள் எழுதியுதவியது.**

அல்வாயூர் திரு. மு. செல்லையா ஆசிரியர் அவர்கள் கவியாக்கும் இயற்கை ஆற்றல் வாய்ந்தவர். பல்லாண்டுகளாகச் சிலேடை நலங்கனியும் பாக்கள் பலதந்து; தமிழ் மக்களுக்கு இன்பமூட்டிய இச் சைவத் திருவாளர் "வளர் பிறை" என்னும் அரிய கவிதைத் தொகுதியும் ஒன்று வெளியிட்டுள்ளார்; அதன்கண் செல்வச்சந்நிதி முருகப்பிரான் மேல் அவர் பாடிய பாடல்கள் கல்மனத்தையுங் கனியாக்கும்.

இவ்வாசிரியர் பாக்களிலே தெய்வ அன்பென்னுந் தேன் சொட்டுதலால் அவை படிப்பாருக்குப் பெரும் பயன் தருவன. இவ்வமைதி முழுவதும் அமைந்துள்ள பத்து ஆசிரிய விருத்தங்கொண்ட ஒருசிறு நூலை அவர்கள் இப்போது 2-ம் பதிப்பாக வெளியிடுகின்றார்கள். இவ்வாசிரியருளத்தில் முருகன் குடிகொண்டிருத்தலால் அப்பிரான்மீது இவர்கள் பாக்கள் இயற்றினுல் அவற்றிலே கவிதைநலம் துளும்பும்.

பொலிகண்டிக் கந்தவனநாதர் ஆலயத்திலே வடக்கு உள்வீதியில் வன்னிமர நீழலில் திருவருட் கனிவினேடும் தரிசிப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் ஆறுமுக சுவாமி விக்கிரகமுளது. அது பண்டைய நாளிலே முல்லைத் தீவுப் பிரிவைச் சார்ந்த குமாரபுரத்திலிருந்து புறமதத்தவர் அட்டூழியஞ் செய்த காலத்து இங்குக் கொண்டுவரப்பட்டதென்பது பல பெரியார் கூற்று.

அடங்கா வன்னித் தமிழனுக்கு அருள்சுரக்கும் குமார புர முருகன்மேல் இவர்பாடிய பாடல்களில் சொல்நயம். பொருள்நயம், கற்பனை ஆதிய பல பண்புகள் காணப்படு கின்றன. பல பெரியார்கள் கருத்துக்களை இவ்வாசிரியர் பொன்னேபோற் போற்றித் தமது பாடல்களோடு அமைத் துள்ளார். "அஞ்சுமுகங் காட்டாது ஆறுமுகங் காட்டவந்த செஞ்சரணச் சேவடி" என்ற தாயுமானுர் சுவாமிகள் திரு வாக்கை இந்நூலில் 2-ம், 7-ம் பாடல்களிற் காண்க. 'தன் னைத் தமிழால் வைதாரையும் முருகன் வாழவைப்பதை' 9-ம் பாடலிற் காண்க. "கைபுனைந் தியற்றுக் கவின்பெறு வனப்பு" என்ற நக்கீரர் வாக்கை 'புனையாத அழகு முடிவே' என்ற முதலாம் பாட்டின் வாக்கிற் காண்க. 4-ம் பாடல் நல்ல உட்குறிப்புக் கொண்டிருக்கின்றது. 'தண்ணீரூற்று' என்ற 'தனியூற்றின்' மாருத வளஅழகை 5-ம் பாடல் தெற் றெனத் தெரிவிக்கின்றது. வண்டின் பண்ணுக்கு மயிலாடுஞ் சோலையாய் என்ற 10-ம் பாடற்றொடர் வன்னிச்சிறப்பைக் கண்முன் நிறுத்துகிறது. ஆறும்பாடல் அருமை மிக அமைந்து தமிழனுகப் பிறந்தவன் அவிச்சுவையை விரும் பாது கவிச்சுவையிலீடுபட்டுத் தண்டமிழ் முருகனை வண் டமிழாற் பாடவேண்டிய கடப்பாட்டை உணர்த்துகின்றது.

இங்ஙனம் பலநலம் மிளிரப் பத்துக்கவி யாத்த இவ் அன்பரின் சொற்பெருவளத்தை முருகன் திருவருள் வளம் மேலும் வளனுறச் செய்து தமிழ்மக்களுக்கு நலம் பல நல்குக.

பலாலி ஆ. ப. கல்லூரி,
15-12-57.

பொ. கிருஷ்ணன்

உ

சிவமயம்

# குமாரபுரக்
# குமரவேள் பதிகம்

விநாயகர் காப்பு

வெண்பா

கூடும் வளமார் குமாரபுர வேளருளை
நாடும் பதிகமிது நன்குரைக்க — ஆடும்
நடராசன் முன்பு நமக்களித்த ஞானக்
கடராசன் பாதமலர் காப்பு.

ஆசிரிய விருத்தம்

பொன்னிதழி தும்பையணி சிவனபய மெனவுதவு
பொறியில்வரு கருணை வடிவே
பூரித்த உமையன்னை களிகூர விளையாடு
புனையாத அழகு முடிவே
வன்னமயில் மீதேறி அடியர்துய ரிருள்போக
வந்தருளுமிள ஞாயிறே
வள்ளிமண முள்ளியொரு வேடனுரு வாய்வந்து
வனத்தினை விரும்பு முதலே
தென்னவன் மதுரையிற் கழகமது தங்கிமுன்
செந்தமிழ் வளர்த்த தேவே
தெய்வந் தெளிந்துமுன் னையங் கடிந்துபல
திருத்தளிக ளாக்கி ஆண்ட
மன்னவர்கள் குடிகாத்த வன்னிமா நாடிதனில்
மருவுங் குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. .... ... 1

அஞ்சுமுக நெஞ்சொடுநின் கஞ்சமலர் தஞ்சமென
அன்பர்வழி பட்டு நிற்ப
ஆறுமுகந் தந்தருளி மாறுமுகம் போக்கவரும்
அப்பனே ஆல வாயில்
வஞ்சிமா தேவிமுன் சென்றமணர் துயர்தீர்த்து
மலிசைவ ஒளிப ரப்பி
மானினேர் விழியாட்கும் மன்னற்கு மமுதமாய்
வந்தருளும் ஞான குருவே
செஞ்சொற் கவிக்கீர ஹற்றுப்ப டைகொண்டு
சேர்ந்த ஆயிரவர் சிறையைத்
தீர்த்தருளு மூர்த்தியே கார்த்திகே யாவெனது
சிறுகுறை தவிர்த்த லரிதோ
வஞ்சந் துலங்கும் மிலேச்சரா விடியுண்டு
மங்கிய குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 2

நோய்கண்டு பாய்கொண்டு வாழ்வினிற் கவலையால்
நுடங்கியுள் சோர்ந்தி டாமல்
நோக்காடு மீக்கூரும் வறுமையால் வாடியே
நுமதருள் மறந்தி டாமல்
பேய்கொண்ட நெஞ்சர்போல் தடுமாறி விபரீதப்
பெருஞ்சுழியில் வீழ்ந்தி டாமல்
பிறவிப் பெருங்கடலி னலைமோது போதெலாம்
பேராத கருணை யோடும்
தாய்கொண்டு பிள்ளையைத் தாங்கியே சந்ததம்
தாலாட்டி யூட்டு மாபோல்
தவறுபல செயினுமெனக் கஞ்சலென் றோதியே
தாழ்விலருள் தருதி வேலா
வாய்கொண்டு துதிபாடி மெய்யால் வலம்வந்து
மருவுங் குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 3

காவைத்து நீரூற்றி மலர்கொய்து மாலைபல
கட்டியுனைச் சூட்டி யறியேன்
கையினு லலகிட்டு நீர்தெளித் துன்பதியிற்
கடனென்றுஞ் செய்த லறியேன்
பாவைத்த தமிழ்மாலை யோதியே உருகிலேன்
பண்டுநல் வினையு மில்லேன்
பாவிக்கு மோராறு காட்டியரு ளீராறு
பங்கயச் செங்கை முருகா
சேவைத்த கொடியாடுந் தில்லையுள் நடமாடுஞ்
சிவனீன்ற கருணை மதலாய்
செம்பிற் களிம்பென்ன நின்றவினை வாட்டியுன்
திருவருட் பொலிவு நல்காய்
மாவைத்த சூர்க்குலம் மாள்வித்து வானவரை
வாழ்வித்தாய் குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 4

பத்தியிற் பூரித்த சித்தர்முகம் போன்றுபல
பங்கயம் மலர ஆங்கே
பாட்டளிகள் மொய்த்துமது வுண்டுசெய் யோசையாற்
பாங்கரில் தூங்கு மேதி
நித்திரை விழித்தெழுந் தேகலாற் சேற்றினொலி
நிறைவுகேட் டுத்து டித்து
நீள்வரால் தத்தியே பாய்கின்ற சுனைமல்கி
நிறைதண்ணீ ரூற்று நகரில்
சித்தரும் முத்தரும் கூடியே பண்டுபல
செய்தவமி யற்று தளியாய்த்
திகழருட் டேக்கமா யோங்கிய குமாரபுரத்
திருப்ப திக்கொரு தெய்வமே
மத்தினிற் றயிர்போல் மனமுடைந் துன்னருளை
வறியனும் வேண்டி நின்றேன்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 5

சந்தக் கடம்புபொலி திருமார்பும் அறுமுகமுந்
தழல்மேனி நிறமுங் கண்டு
தணலிட்ட நெய்போல உருகாத கண்களும்
தமிழ்மருவு கவிதை யாலே
சிந்தைக் கினிக்கத் தமிழ்பேறப் பாடாது
தின்றுசுவை கொண்ட நாவும்
சீலமொடு விரதநெறி பூண்டுபல தொண்டினிற்
செல்லாத கல்லு மனமும்
நிந்தைபல நாடலால் நின்கோயில் சுற்றாத
நீசக்கால் கும்பி டாக்கை
நேசருரை கேட்டுந் திருந்தாத சுரைக்காதும்
நியமித்தான் விதியெ னக்கு
வந்தபிற விக்கினியென் செய்குவேன் யாவையும்
மறந்தருள் குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 6

அஞ்சுதலை யுற்றுன்ற னறுதலை நாடியே
ஆவலிற் கடிது வந்தேன்
ஐம்பாலி னிருவ ருன்பாலி லேயமர
* அன்னைமா ரென்று வந்தேன்
கஞ்சமல ராரேடி ரண்டினையென் விழிகுளிரக்
கண்டுள்ளேன் வேறென் றுள்ளேன்
காலுமயில் கைம்மேவக் கானமயில் மீதமருங்
காட்சியையென் னென்று சொல்வேன்
பஞ்சரக் கிளிவாயி லுன்நாமங் கேட்டுமகிழ்
பாவையர்கள் மாடி தோறும்
பாலும் புளிக்கஇரு சேலும் விழிக்கவொரு
பற்றினிடை முற்றி நிற்பார்
மஞ்சுதவழ் தாருபல மிஞ்சுவன் னிப்பதியில்
மருவுங் குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 7

* அன்னைமார் + என்று + உவந்தேன்.

பத்திக்கு வித்தான நன்னெறிம றந்துகொடும்
பாழ்வழியி லேகி யுன்னைப்
பாவினல் நாவினல் துதியாது வீண்காலம்
பலகழித் தேன்கு மரனே
தித்திக்கு நின்கருணைத் தேனூட்டி வழிகாட்டிச்
சேயெனைத் தேற்றி யுன்றன்
செந்தாள் மலரிரண் டின்மீதி லன்புறச்
சேர்த்தென்னை யாளு முருகா
* வத்திக்கு வைகையிடை ஏகிமுன் மண்கொண்ட
வரதனர் மகிழ மகனே
வையுற்ற ஞானவேல் கையுற்ற அறுமுகா
வாருகா என்த னருகா
எத்திக்கும் புகழோட்டு வன்னியர்கள் முன்னைநாள்
ஈட்டிய குமார புரத்தில்
இயல்குமர வேளுனது சரணமலர் அரணென்றிங்(கு)
ஏத்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 8

* வத்தி = வந்தி என்பதன் வலித்தில் விகாரம்

தெள்ளுதமிழ்ப் பாவினு லேசினுங் கருணைமழை
சிந்தியே அன்பர்க் கெல்லாந்
தெவிட்டாத நோக்குதவு திருவிழிகள் மூந்நான்கும்
செங்கரமீ ராறுங் கொண்ட
வள்ளிமண வாளனே என்குறைகள் தீர்த்தருள
மற்று நீபின் நிற்பையோ
வானகம் வாழ்வித்த கானமயில் வாகனு
வாட்டுதுய ரோட்டு முருகா
வெள்ளமதக் கரியோல மிட்டலற வந்தருள்செய்
வெண்ணெய்க் கண்ணன் மருகனே
மேவுபன் றிக்குருளைக் கூட்டுதா யாய்வந்த
விடையினு னுதவு குமரா
வள்ளலே ஐம்புல னடக்கியுனை வாழ்த்தவும்
வலியிலன் குமார புரத்தில்
மகிழ்குமர வேளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... ... 9

விண்ணுக்கு முயர்வான குமாரபுரம் பண்டுநாள்
விளங்குயர்வு மாய்ந்த தாலே
வெம்பிணியுங் கலியுமாய்க் கல்விநல மாதியன
விட்டிங்கு வாட லானும்
உண்ணெக்கு நின்றுருகு நிலைமீட்க இந்நாளில்
உன்கோவில் புதுக்கி யாக்கி
"ஓம்" ஒலிகள் தங்குநீ ரூற்றுநிறை தனியூற்றில்
உன்னை வழிபட்டோம் வண்டின்
பண்ணுக்கு மயிலாடும் சோலையாய் வனமெலாம்
பலிக்க அருள்பா லித்துநாம்
பழமைபோல் வாழ்வுறக் காலமினி நீளுமோ
பன்னிருகை ஐய பகராய்
மண்ணினுக் கொருமருந் தானகலி யுகமுருகா
மருவுங் குமார புரத்தில்
மகிழ்தமரவே ளுனது சரணமலர் அரணென்று
வாழ்த்திமுடி தாழ்த்தி னேனே. ... **10**

திருச்சிற்றம்பலம்



# அரும்பத உரை.

| | | |
|---|---|---|
| 1. இதழி | — | கொன்றைப்பூ |
| ஞாயிறு | — | சூரியன் |
| தென்னவன் | — | பாண்டியன் |
| கழகம் | — | தமிழ்ச்சங்கம் |
| தளி | — | கோவில் |
| சரணமலர் | — | திருவடிமலர் |
| அரண் | — | காவல் |
| 2. கஞ்சமலர் | — | தாமரைப்பூ |
| ஆலவாய் | — | மதுரை |
| வஞ்சிமாதேவி | — | மங்கையர்க்கரசி |
| அமணர் | — | சமணர் |
| கீரன் | — | நக்கீரதேவர் |
| 3. நுடங்கி | — | வருந்தி |
| மிக்கூரும் | — | அதிகரிக்கும் |
| அஞ்சல் | — | பயமொழிக |
| 4. கா | — | நந்தவனம் |
| அலகிட்டு | — | மெழுகி |
| சே | — | எருது |
| மதலாய் | — | குழந்தையே |
| பங்கயம் | — | தாமரை |
| 5. அளி | — | வண்டு |
| மது | — | தேன் |
| மேதி | — | எருமை |
| வரால் | — | வாளைமீன் |

| | | |
|---|---|---|
| 6. கடம்பு | — | கடப்பமாலை |
| விதி | — | பிரமன் |
| 7. அஞ்சுதலையுற்று | — | பயந்து |
| ஆறுதலை | — | துணையை |
| ஐம்பாலினர் | — | வள்ளி தெய்வ நாயகிமார் |
| கண்டுள்ளேன் | — | கண்டேன் |
| வேறென்றுள்ளேன் | — | வேறென்றை எண்ணேன் |
| காலும் அயில் | — | ஒளி வீசும் வேல் |
| பஞ்சரம் | — | கூடு |
| பாவையர்கள் | — | கன்னியர்கள் |
| இருசேல் | — | இரு கண்கள் |
| மஞ்சு | — | முகில் |
| தாரு | — | மரங்கள் |
| 8. சேய் | — | பிள்ளை |
| வித்து | — | விதை |
| 9. கரி | — | யானை |
| வெண்ணெய்க்கண்ணன் | — | திருமால் |
| பன்றிக்குருளை | — | பன்றிக்குட்டிகள் |
| 10. கலி | — | வறுமை |
| ஒருமருந்து | — | ஒப்பற்ற அமுதம் |

அச்சுப்பதிவு: கலாபவன அச்சகம், வியாபாரிமூலை.